DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 4

| | | |
|---|---|---|
| Name | : | பேபி (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சிங்களாந்தபுரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். (சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்.)

கடந்த 07.11.2024ம் தேதி மதியம் சுமார் 03.00 – 03.15 மணிக்கு ஆஜர் எதிரி பசுபதி விருந்தினராக பக்கத்து வீடான சண்முகம் என்பவரது வீட்டிற்கு வந்திருந்தார். எனது அக்கா மகன்கள் தினேஷ் மற்றும் சந்திரபாபு எனது வீட்டிற்கு விருந்தினராக வந்திருந்தார்கள். அப்போது எனது வீட்டிற்கு அருகே உள்ள சண்முகம் வீட்டிற்கு அருகே பசுபதிக்கும் சந்திரபாபுவிற்கும் சண்டை வந்து இருவரும் ஒருவரை ஒருவர் தகாத வார்த்தைகளால் திட்டிகொண்டனர். அப்போது தினேஷ் அவர்களை விலக்கசென்றபோது ஆஜர் எதிரி பசுபதி தினேசை பார்த்து நீ என்னடா விலக்கர என கூறி கையில் வைத்திருந்த கத்தியால் தினேசின் இடது பக்க வயிற்றில் குத்திவிட்டார். நாங்கள் அங்கே செல்ல எதிரி சம்பவ இடத்தில் இருந்து சென்றுவிட்டார். நாங்கள்

தினேசை சிங்களாந்தபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றோம். அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு தினேசை கொண்டு சென்றோம். அங்கு அவர் சுமார் ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிரியை எனக்கு தெரிமா என்றால் தெரியும். சம்பவம் நடந்த இடத்தில் ஆஜர் எதிரி இருந்தாரா என்றால் இருந்தார். தகராறு நடக்கும்போது நான் எனது வீட்டில் இருந்தேன் என்றால் சத்தம் கேட்டு வெளியே வந்தேன். சத்தம் கேட்டு வெளியே வந்தபோது பிரச்சனை முடிந்திருந்தது என்றால் சரியல்ல நாங்கள் வந்தபோதுதான் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு வெளியே வந்தபோது என்ன நடந்தது என்றால் எதிரியும் சந்திரபாபுவும் சண்டை போட்டுகொண்டிருந்தார்கள்.

கத்தியை யார் வைத்திருந்தார்கள் என்றால் ஆஜர் எதிரிதான் வைத்திருந்தார். சந்திரபாபு தான் கத்தியை எடுத்து வந்தார் என்றாலும், சந்திரபாபு எனது அக்கா மகன் என்பதால் நான் அவருக்கு பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கத்தி எவ்வளவு நீளம் இருந்தது என்றால் சிறிதளவு மட்டுமே எனக்கு தெரிந்தது முழு நீளம் எனக்கு தெரியவில்லை. சம்பவத்தின்போது நான் எனது வீட்டில் இருந்ததால் நான் சம்பவத்தை பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**